**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 14/2020**
**நாள் 05/02/2025 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ரேவதி | க/பெயர் – சிவகுமார் |
| வயது – 36 | தொழில் – |
| விலாசம் – எண் 64, அம்மன் கோயில் தெரு, போலச்சியம்மன்குளம் கிராமம், பொன்னேரி | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1986ல் பிறந்தேன். எனக்கு தற்போது 36 வயது. பாலப்பரெட்டி எனது தந்தை வழி தாத்தா ஆவர். வாதி எனது சித்தப்பாவான அப்பாவு –யின் ஒரே மகன். எனது சித்தப்பா இறந்த வருடம் தெரியாது. அப்போது நாங்கள் சிறுவயதினர். வழக்கு சொத்து மற்றும் எனது சிறு வயதில் குடும்பத்தில் நடந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. 3ம் பிரதிவாதி எனது சகோதரர் என்பதால் அவருக்கு பௌவ்வயப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**